OMT - 101

செயல்பணி கையேடு

# இளங்கலையின் ஆயத்த படிப்பு (BPP)

# பொதுக் கணிதத்தில் ஆயத்த பாடம்

(ஜனவரி 2015 மற்றும் ஜீலை 2015 சேர்க்கை)

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

அறிவியல்களின் மையம்
இந்திரா காந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
மெய்டன் கார்கி, புது தில்லி – 110 068

அன்பான மாணவரே,

இந்தச் செயல்பணிக் கையேடு உங்களுக்கு அனுப்பப்பட்ட அச்சிடப்பட்ட பாடப்புத்தகங்கள் பற்றிய சில கேள்விகளை உள்ளடக்கியது. இந்தப் பாடத்தின் தொடர் மதிப்பிடலின் பகுதியாக இந்தச் செயல்பணி இருப்பதால் இதைச் செய்வது அவசியமானதாக உள்ளது.

பாடப்புத்தகங்களை நீங்கள் எங்ஙனம் புரிந்துகொண்டுள்ளீர்கள் என்பதை நீங்கள் மதிப்பிட உதவுவதே இந்தச் செயல்பணியின் முக்கிய காரணம், அச்சிடப்பட்ட பாடப்புத்தகத்தில் உள்ள தகவல்கள் இந்தச் செயல்பணியை முடிக்க போதுமானதாக இருத்தல் வேண்டும்.

நீங்கள் இந்தச் செயல்பணியை குறிப்பிட்ட காலத்தில் முடித்திருக்க வேண்டும். நீங்கள் இந்தச் செயல்பணியைக் குறிப்பிட்ட காலத்தில் சமர்ப்பிக்கவில்லையெனில், பருவத்தேர்வு எழுதுவதற்கு நீங்கள் அனுமதிக்கப்படமாட்டீர்கள். இந்தச் செயல்பணியை முடிக்காமல் நீங்கள் பருவத்தேர்வு எழுதுவீர்களேயானால், பிறகு அந்தப் பருவத்தேர்வின் முடிவுகள் ரத்து செய்ப்படக்கூடியது.

தயவுசெய்து உங்களது செயல்பணியை மார்ச் 31, 2015 (அ) நவம்பர் 31. 2015–க்குள் சமர்ப்பிக்கவும்.

**உங்களுடைய கல்வி மையத்தைச் சேர்ந்த பாட ஆலோசகர் உங்கள் செயல்பணி மற்றும் ஓஎம்ஆர் (OMR) தாள்களை நீங்கள் சமர்ப்பித்த நாளுக்குப் பிறகு ஒரு மாதத்தில் மதிப்பீடு செய்து கருத்துகள் வழங்குவார்.** இந்தக் கருத்துகள் உங்களுடைய பாடத்தைப் புரிந்துகொள்ளும் தன்மை பற்றி சில குறைநிறைகளை உங்களுக்குக் கொடுக்கும்.

உங்களது சொந்த பயன்பாட்டிற்காக, உங்களது கல்வி மையத்தின் ஒருங்கிணைப்பாளருக்கு நீங்கள் சமர்ப்பிக்கும் முன் அனைத்து செயல்பணிகளின் **ஒரு பிரதியை வைத்துக்கொள்ளவும்.** உங்களுடைய மதிப்பீடு செய்யப்பட்ட செயல்பணிகள் அவற்றுக்குரிய கருத்துக்களுடன் நீங்கள் சமர்ப்பித்த ஒரு மாதத்திற்குள் திரும்பப்பெறவில்லையெனில், தயவு செய்து உங்களது கல்வி மையத்தின் ஒருங்கிணைப்பாளரை அணுகவும்.

ஒருவேளை நீங்கள் 31 மார்ச், 2015–க்குள் உங்களது செயல்பணி பதிலை சமர்ப்பிக்க முடியவில்லையெனில் பிறகு நீங்கள் அடுத்த குழு மாணவர்களுக்கான செயல்பணிக்காகக் காத்திருக்க வேண்டும். **புதிய செயல்பணிக்கான வேண்டுகோளை புரோகிராம் கெய்டில் அச்சிடப்பட்டுக் கொடுக்கப்பட்ட படிவத்தில் துணைப்பதிவாளர், புத்தகத் தயாரிப்பு மற்றும் பகிர்ந்தளிப்பு பிரிவு, இந்திரா காந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகம், மெய்டன் கார்கி, புது தில்லி–110 068 என்ற முகவரிக்கு ஜனவரி/பிப்ரவரி மாதத்தில் அனுப்பவும்.** (செயல்பணிகள் இக்னோ இணையதளமான www.ignou.ac.in-லும் கிடைக்கக்கூடியது. நீங்கள் "ஸ்டுடண்ட் ஜோன் → அசைன்மென்ட்ஸ் → பீபிபி இணைப்பைக் கிளிக் செய்து அவைகளைப் பெறலாம்).

## உங்களது செயல்பணிகளை வடிவமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்

செயல்பணிகளை முயற்சிப்பதற்கு முன்பு கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாகப் படிக்கவும்.

**1)** உங்களுடைய பதில் தாளில் முதல் பக்கத்தின் மேலே, விவரங்களைச் சரியாக கீழ்வரும் வடிவமைப்பில் தயவு செய்து எழுதவும்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பதிவு எண் | : | ------------------ |
| | | | பெயர் | : | ------------------ |
| | | | முகவரி | : | ------------------ |
| பாடக்குறியீட்டு எண் | : | -------------- | | | |
| பாடத்தின் பெயர் | : | -------------- | | | |
| செயல்பணி எண் | : | -------------- | | | |
| கல்வி மையம் | : | -------------- | தேதி | : | ------------------ |

மேலே கொடுக்கப்பட்ட படிவத்தைக் கண்டிப்பாகத் தயவு செய்து பின்பற்றி மதிப்பீட்டை எளிதாக மற்றும் தாமதத்தைத் தடுக்க வகை செய்யவும்.

**2)** சட்டஅளவு காகிதத்தை (ஆனால் மிகவும் மெலிதான வகை இல்லை) மட்டுமே உங்கள் பதில்களை எழுதப் பயன்படுத்த வேண்டும்.

**3)** உங்களது பதில் தாளில் இடது, மேல் மற்றும் கீழ் 4 செ.மீ. விளிம்பு விடவும்.

**4)** உங்களுடைய பதில்கள் மிகவும் துல்லியமாக இருத்தல் வேண்டும்.

**5)** பிரச்சினைகளைத் தீர்க்கும் பொழுது, கேள்வியின் எந்தப் பகுதி தீர்க்கப்பட்டது என்பதைத் தெளிவாகக் குறிக்க வேண்டும்.

**6. இந்தச் செயல்பணி (பூர்த்தி செய்யப்பட்ட ஓஎம்ஆர் (OMR) தாளுடன்) கல்வி மையத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

7. **இந்தச் செயல்பணி 31–12– 2015 வரை மட்டுமே பொருந்தும்.**

**உங்களுடைய பதில் தாள்களின்ஒரு பிரதியை வைத்துக் கொள்ளுமாறு** நாங்கள் மிகவும் பரிந்துரைக்கின்றோம்.

உங்களுக்கு எங்களது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

Kindly visit the website as follows:

https://webservices.ignou.ac.in/assignments/bpp.htm

And download the assignments